சார்பு நீதிமன்றம், மேலூர்
நாள்: 07.04.2026
வா.சா.1 – அண்ணாதுரை S/o வெள்ளைதம்பி
OS No.279/2024
(சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.)
1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :

நான் விவசாயம் செய்து வருகிறேன். நான் 8-10 ஆண்டுகளாக விவசாயம் செய்து வருகிறேன்.நான் வழக்கு சொத்தை கிரையம் வாங்குவதற்கு முன்பாக வில்லங்கம் சரிபார்த்து வாங்கினேனா என்றால் வில்லங்கம் சரிபார்த்து தான் வாங்கினேன். வழக்கு சொத்தினுடைய அசல் ஆவணங்கள் என்னிடம் இருந்து நான் வழக்கில் தாக்கல் செய்திருக்கிறேன். 1990களில் சொத்தை வாங்குபவர் கையெழுத்திட வேண்டிய அவசியம் இல்லை என்றும் விற்பனை செய்பவர் மட்டுமே கையெழுத்திடும வழக்கம் இருந்தது என்றால் சரிதான். அனந்த சீனிவாசன் 1ம் பிரதிவாதி போலியாக பத்திரம் ஏற்பட்டது தொடர்பாக காவல்நிலையத்தில் புகார் அளித்த விபரம் தெரியுமா என்றால் தெரியும். இந்த வழக்கு சொத்தினுடைய அனந்த சீனிவாசனின் மூல கிரைய பத்திரம் தொலைந்தது தொடர்பாக விபரம் என்கு தெரியுமா என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. அனந்த சீனிவாசன் தான் என்னிடம் சொத்தை விற்பனை செய்யும் போது அசல் ஆவணத்தை கொடுத்தார்.

மறுவிசாரணை : இல்லை.

SAMUNDESWARIPRABHA

Digitally signed by SAMUNDESWARIPRABHA
Date: 2026.04.07 20:03:49 +0530

Sub Judge
Melur